# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 4-9 - நண்ணாதார்
**(ஆழ்வார் மாலுக்கு ஆட்செய்யாது துன்புறும் உயிர்களைக் கண்டு, கண் கலங்கி வெறுப்புற்று, தம்மைத் திருவடியில் சேர்த்துக் கொள்ளுமாறு எம்பெருமானை வேண்டுதல்)**

3095 * நண்ணாதார் முறுவலிப்ப *
நல்லுற்றார் கரைந்தேங்க *
எண்ணாராத் துயர் விளைக்கும் *
இவை என்ன உலகியற்கை? **
கண்ணாளா! கடல் கடைந்தாய்! *
உனகழற்கே வரும் பரிசு *
தண்ணாவாது அடியேனைப் *
பணிகண்டாய் சாமாறே 1

3096 சாமாறும் கெடுமாறும் *
தமருற்றார் தலைத் தலைப்பெய்து *
ஏமாறிக் கிடந்து அலற்றும் *
இவை என்ன உலகியற்கை? **
ஆமாறு ஒன்றறியேன் நான் *
அரவணையாய்! அம்மானே! *
கூமாறே விரை கண்டாய் *
அடியேனைக் குறிக்கொண்டே 2

3097 கொண்டாட்டும் குலம்புனைவும் *
தமறுற்றார் விழுநிதியும் *
வண்டார் பூங்குழலாளும் *
மனை ஒழிய உயிர் மாய்தல் **
கண்டாற்றேன் உலகியற்கை *
கடல்வண்ணா! அடியேனை *
பண்டே போல் கருதாது *
உன் அடிக்கேகூய்ப் பணிகொள்ளே 3

3098 கொள்ளென்று கிளர்ந்தெழுந்த *
பெருஞ்செல்வம் நெருப்பாக *
கொள்ளென்று தமம்மூடும் *
இவை என்ன உலகியற்கை? **
வள்ளலே! மணிவண்ணா! *
உனகழற்கே வரும் பரிசு *
வள்ளல் செய்து அடியேனை *
உனதருளால் வாங்காயே 4

3099 வாங்கு நீர் மலருலகில் *
நிற்பனவும் திரிவனவும் *
ஆங்கு உயிர்கள் பிறப்பிறப்புப் *
பிணி மூப்பால் தகர்ப்புண்ணும் **
ஈங்கு இதன் மேல் வெந்நரகம் *
இவை என்ன உலகியற்கை? *
வாங்கு எனை நீ மணிவண்ணா! *
அடியேனை மறுக்கேலே 5

3100 மறுக்கிவல்வலைப்படுத்திக் *
குமைத்திட்டுக் கொன்றுண்பர் *
அறப்பொருளை அறிந்தோரார் *
இவை என்ன உலகியற்கை? **
வெறித்துளவ முடியானே! *
வினையேனை உனக்கடிமை
அறக்கொண்டாய்! * இனி
என்னாரமுதே! * கூயருளாயே 6

3101 ஆயே! இவ்வுலகத்து *
நிற்பனவும் திரிவனவும் *
நீயே மற்றொரு பொருளும் *
இன்றி நீ நின்றமையால் **
நோயே மூப்பிறப்பிறப்புப் *
பிணியே என்றிவை ஒழிய *
கூயே கொள் அடியேனைக் *
கொடுவுலகம் காட்டேலே 7

3102 காட்டி நீ கரந்து உமிழும் *
நிலம் நீர் தீ விசும்பு கால் *
ஈட்டி நீ வைத்து அமைத்த *
இமையோர் வாழ் தனிமுட்டை **
கோட்டையினில்[1] கழித்து * எனை உன்
கொழுஞ்சோதி உயரத்து *
கூட்டரிய திருவடிக்கள் *
எஞ்ஞான்று கூட்டுதியே? 8

3103 கூட்டுதி நின் குரைகழல்கள் * இமையோரும்
தொழா வகை செய்து *
ஆட்டுதி நீ அரவணையாய்! *
அடியேனும் அஃதறிவன்[2] **

---

[1] கோட்டையினை

[2] அதுவறிவன்

வேட்கை எல்லாம் விடுத்து * என்னை உன்
திருவடியே சுமந்துழல *
கூட்டரிய திருவடிக்கள் *
கூட்டினை நான் கண்டேனே 9

3104 கண்டு கேட்டு உற்று மோந்து
உண்டு உழலும் * ஐங்கருவி
கண்ட இன்பம் * தெரிவரிய
அளவில்லாச் சிற்றின்பம் **
ஒண்தொடியாள் திருமகளும் *
நீயுமே நிலா நிற்ப *
கண்ட சதிர் கண்டொழிந்தேன் *
அடைந்தேன் உன் திருவடியே 10

3105 * திருவடியை நாரணனைக் *
கேசவனைப் பரஞ்சுடரை *
திருவடி சேர்வது கருதிச் *
செழுங்குருகூர்ச் சடகோபன் **
திருவடிமேல் உரைத்த தமிழ் *
ஆயிரத்துள் இப்பத்தும் *
திருவடியே அடைவிக்கும் *
திருவடி சேர்ந்து ஒன்றுமினே 11

**அடிவரவு:** நண்ணா சாமாறு கொண்டு கொள் வாங்கு மறுக்கி ஆயே
காட்டி கூட்டுதி கண்டு திருவடி ஒன்றும்